DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.65/2016 |
| Deposition of Witness for | : | P.W.8 |
| Name | : | **செல்வி. சிவரஞ்சனி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1, 4, 8 ஆஜர். 2, 3, 5, 6, 7, 9, 10, 11, 12 எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3, 5, 6, 7, 9, 10, 11, 12 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருப்புவனத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தின்போது கீழ ராங்கியத்தில் குடியிருந்து வந்தேன். வழக்கின் புகார்தாரர் சண்முகம் என்பவர் மாமா முறையாவார். சாட்சிகள் செல்வகணபதி என்ற செல்வமணி, ஜெயமணி, ராஜேஸ்வரி ஆகியோரை எனக்கு தெரியும். கீழராங்கியத்தை சேர்ந்தவர்கள். வழக்கின் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 24.01.2015 ம் தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். அப்போது எங்கள் ஊரில் உள்ள மந்தையில் சத்தம் அதிகமாக கேட்டது.

2. அப்போது அந்த இடத்தில் எதிரிகள் நின்று கொண்டு அசிங்கமான வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்தார்கள். மேலும் கற்களை வீசி தாக்கினார்கள். கற்களை வீசியதில் எனக்கு இடது காலில் காயம் ஏற்பட்டது. எதிரிகள் முருகானந்தம், மாரி ஆகியோர் கற்களை வீசியதில் எனக்கு இடது காலில் காயம் ஏற்பட்டது. என்னுடன் இருந்த ஜெயமணி, செல்வகணபதி, சண்முகம் மாமா, ராஜேஸ்வரி ஆகியோருக்கும் சம்பவத்தில் காயம் ஏற்பட்டது.

3. தேர்தல் முன் விரோதம் காரணமாக எதிரிகள் எங்களை தாக்கினார்கள். நான் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்பு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு என்னை அனுப்பி வைத்தார்கள். எனக்கு காயம் ஏற்பட்டமறுநாள் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைத்து போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சண்முகம் என்பவர் எனது உறவுக்காரர் என்றால் சரிதான். வழக்கின் எதிரிகள் எனக்கு உறவுக்காரர்கள் என்றால் சரிதான். தேர்தல் காரணமாக முருகானந்தம் வகையறாவும், புகார்தாரர் வகையறாவும் பேசிக்கொள்ள மாட்டார்கள் என்றால் சரிதான். மந்தையில் சத்தம் கேட்டு தான் சென்றேன் என்றால் சரிதான். யார் யார் எதை வைத்து தாக்கினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் மந்தைக்கு போகும்போது சுமார் 50 பேருக்கு மேல் கூடியிருப்பார்கள் என்றால் சரிதான்.

2. சண்முகம் எத்தனை பேரின் மீது புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 10, 12 பேர் மீது புகார் கொடுத்திருப்பார். இந்த வழக்கில் சண்முகம் சில பேரின் மீது பொய்யாக புகார் கொடுத்து அவர்களை வழக்கிலிருந்து நீக்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சண்முகம் வகையறா எதிரிகளை தாக்கியதில் புகார்தாரர் மீது வழக்கு தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பொய் வழக்கு.

3. எதிரிகளால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் கூட்ட நெரிசலில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் தரப்பினரை பழிவாங்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவயிடத்திற்கு நான்சென்றிருந்தால் சம்பவத்தை பற்றி தெரிந்திருக்கும் என்றும் அதனால் தான் என்னால் குறிப்பிட்டு கூறமுடியவில்லை என்றும் புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.10.06 15:43:53 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**